सत्यमेव जयते

भारत का राजपत्र

# The Gazette of India

இந்திய அரசிதழ்

असाधारण

**EXTRAORDINARY**

சிறப்பிதழ்

भाग XV अनुभाग 1

**Part XV Section 1**

பகுதி XV பிரிவு 1

प्रधिकार प्राकाशित

**PUBLISHED BY AUTHORITY**

அதிகாரத்துடன் வெளியிடப்பட்டது

नई दिल्ली, सूक्वार, 26 ऐपरल 1996 / 1918 शक

New Delhi, Friday, 26th April 1996

*புது தில்லி, 1996 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 26ஆம் தேதி, வெள்ளிக்கிழமை*

## Ministry of Law, Justice and Company Affairs

(Law Department)

New Delhi, the 26th April 1996

***சட்ட, நீதி மற்றும் நிறும அலுவல்கள் அமைச்சகம்***

*(சட்டத்துறை)*

*புது தில்லி, 26, ஏப்ரல் 1996*

The translation in Tamil of the Destruction of Records Act, 1917 (5 of 1917), The Haj Committee Act, 1959 (51 of 1959), The National Highways Act, 1956 (48 of 1956), The Armed Forces (Emergency Duties) Act, 1947 (15 of 1947), The Copy Rights Act, 1957 (14 of 1957), The Muslim Women (Protection of Rights of Divorce) Act, 1986 (25 of 1986), The Bankers' Books Evidence Act, 1891 (18 of 1891), The Antiquities and Art Treasures Act, 1972 (52 of 1972), The Bonded Labour System (Abolition) Act, 1976 (19 of 1976), The Interest Act, 1978 (14 of 1978), The Disputed Elections (Prime Minister and Speaker) Act, 1977 (16 of 1977) are hereby Published under the authority of the President and shall be deemed to be the authorised translations thereof in Tamil under clause (a) of section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (50 of 1973).

*பதிவணங்களை அழித்தல் சட்டம், 1917 (5/1917), ஹஜ்குழுச் சட்டம், 1959 (51/1959), தேசிய நெடுஞ்சாலைகள் சட்டம், 1956 (48/1956), ஆயுதப்படையினர் (நெருக்கடி நிலைக்கடமைகள்) சட்டம், 1947 (15/1947), பதிப்புரிமைச் சட்டம், 1957 (14/1957), முஸ்லிம் பெண்கள் (மணமுறிவு மீதான உரிமைகள் பாதுகாப்புச்) சட்டம், 1986 (25/1986), வங்கியர் கணக்குப் புத்தகங்கள் சாட்சியச் சட்டம், 1891 (18/1891), தொல்பொருள்கள் மற்றும் கலைக்கருவூலங்கள் சட்டம், 1972 (52/1972), கொத்தடிமை வேலைமுறை (ஒழிப்புச்) சட்டம், 1976 (19/1976), வட்டிச் சட்டம், 1978 (14/1978), மறுத்து வாதிடப்படும் (தலைமை அமைச்சர் மற்றும் பேரவைத்தலைவர்) தேர்தல்கள் சட்டம், 1977 (16/1977) ஆகியவற்றின் தமிழ் மொழிபெயர்ப்பு குடியரசுத் தலைவரின் அதிகாரத்தின்படி இதன்மூலம் வெளியிடப்படுகின்றன. அதிகார உறுதிபெற்ற வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973 (50/1973)இன் பிரிவு 2இன் கூறு(அ)வின்படி இவையே தமிழில் அதிகார உறுதிபெற்ற வாசகங்களாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.*

**PRICE: Rs. 60.00**

# வட்டிச் சட்டம், 1978

(சட்ட எண் 14/1978)

[1978, மார்ச்சு 31]

குறித்தசில நேர்வுகளில் வட்டியை அனுமதிப்பது தொடர்பான சட்டத்தை ஒருங்கிணைப்பதற்கும் திருத்தம் செய்வதற்குமான சட்டம்.

இந்தியக் குடியரசின் இருப்பத்தொன்பதாம் ஆண்டில் நாடாளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக :—

**குறுந்தலைப்பு அளாவுகை மற்றும் தொடக்கம்.**

1. (1) இந்தச் சட்டம், வட்டிச் சட்டம், 1978 என்று வழங்கப்பெறும்.

(2) இது ஜம்மு-காஷ்மீர் மாநிலம் நீங்கலாக, இந்தியா முழுவதையும் அளாவி நிற்கும்.

(3) இது, மைய அரசாங்கம் அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாகக் குறித்திடலாகும்[1] தேதியன்று செல்லாற்றல் பெறும்.

**பொருள் வரையறைகள்.**

2. இந்தச் சட்டத்தில் தறுவாயின் தேவை வேறானாலன்றி,—

(அ) ''நீதிமன்றம்'' என்பது, தீர்ப்பாயம் ஒன்றையும் பொதுவர் ஒருவரையும் உள்ளடக்கும் ;

(ஆ) ''நடப்பு வட்டிவீதம்'' என்பது, வங்கித்தொழில் ஒழுங்குறுத்தும் சட்டம், 1949இன்படி இந்தியச் சேமவங்கியினால் வங்கித் தொழில் நிறுமங்களுக்குப் பொதுவாக வழங்கப்படும் அல்லது இடப்படும் பணிப்புரைகளுக்கு இணங்கிய வகையில், வெவ்வேறு வகையிலான பட்டியலில்கண்ட வங்கிகளினால் (சேமிப்புக் கணக்கில் வைத்துவரப்பட்டவை அல்லது அற அல்லது சமய நிறுவனங்களால் வைத்து வரப்பட்டவை அல்லாத பிற) வெவ்வேறு வகையிலான வைப்பீடுகளின் மீது எந்த மேல்வரை அளவு வீதத்தில் வட்டி செலுத்தப்படலாகுமோ அந்த மேல்வரை அளவு வீதத்தின் உச்ச அளவு என்று பொருள்படும்.

**விளக்கம்.**—இந்தக் கூறில், ''பட்டியலில் கண்டவங்கி'' என்பது வங்கித்தொழில் ஒழுங்குறுத்தும் சட்டம், 1949ஆல் அதிகாரமளிக்கப்பட்ட அலுவல் எதனையும் நடத்திவருகிற கூட்டுறவு வங்கி அல்லாத ஒரு வங்கி என்று பொருள்படும் ;

(இ) ''உறுகடன்'' என்பது, உறுதியாகத் தெரிந்துகொள்ளப் பட்ட பணத்தொகைக்கான கடப்பாடு எதுவும் என்று பொருள்படும், மற்றும் பண்டமாகச் செலுத்தப்படத் தக்கதோர் உறுகடனையும் உள்ளடக்கும் ஆனால் தீர்ப்புக்கடனை உள்ளடக் ாது;

(ஈ) ''உடலூறுகள்'' என்பது, நோய் எதனையும் மற்றும் நபர் ஒருவரின் உடல் அல்லது மனநிலையில் பழுதடைந்த நிலை எதனையும் உள்ளடக்கும் ;

(உ) இதில் பயன்படுத்தப்பட்டு ஆனால் பொருள்வரையறை செய்யப்பட்டிராதவையும் இந்தியச் சேமவங்கிச் சட்டம், 1934இல் பொருள் வரையறை செய்யப்பட்டுள்ளவையுமான பிற அனைத்துச் சொற்களும் சொற்றொடர்களும், அந்தச் சட்டத்தில் முறையே அவற்றிற்குக் குறித்தளிக்கப்பட்டுள்ள பொருள்களை உடையனவாகும்.

**வட்டியை அனுமதிப்பதற்கு நீதிமன்றத்திற்குள்ள அதிகாரம்.**

3. (1) உறுகடன் அல்லது இழப்பீடு எதனையும் வசூலிப்பதற்கான நடவடிக்கைகள் எவற்றிலும் அல்லது உறுகடன் அல்லது இழப்பீடு எது பொறுத்தும் ஏற்கெனவே செலுத்தப்பட்ட வட்டிக்காக எந்த நடவடிக்கைகளில் கோருரிமை செய்யப்பட்டிருக்கிறதோ அந்த நடவடிக்கைகள் எவற்றிலும் நீதிமன்றம், அது பொருத்தமெனக் கருதுமாயின், உறுகடனுக்கோ இழப்பீட்டிற்கோ உரிமைகொண்டுள்ள நபருக்கு அல்லது, நேர்வுக்கேற்ப, அத்தகைய கோருரிமையைச் செய்யும் நபருக்கு பின்வரும் காலஅளவுக்கு முழுவதுமாகவோ

---

1. இந்தச் சட்டம், 19—8—1981 அன்று செயலுறுத்தப்பட்டது. 14—8—1981 இந்திய அரசிதழின் சிறப்பிதழ் பகுதி II 3 (i) பக்கம் 1115, ஏஸ்.ஓ.ஓ. (உ)வைப் பார்க்கவும்.

பகுதியாகவோ நடப்பு வட்டி வீதத்திற்கு மேற்படாத ஒரு வட்டிவீதத்தில் வட்டியை அனுமதிக்கலாம், அதாவது—

(அ) அந்த நடவடிக்கைகள் எழுத்துவடிவிலான முறையாவணத்தின் பயன்திறனால் குறிப்பிட்ட காலஅளவிற்குள் செலுத்தப்படத் தக்க உறுகடன் தொடர்பானதாக இருக்குமாயின், அப்போது, உறுகடன் செலுத்தப்படத் தக்கதான தேதியிலிருந்து, நடவடிக்கைகள் தொடரப்பட்ட தேதிவரை ;

(ஆ) அந்த நடவடிக்கைகள் அத்தகைய ஏதேனும் உறுகடன் தொடர்பானதாக இல்லாதிருக்குமாயின், அப்போது, உரிமை கொண்டுள்ள நபரால் அல்லது வட்டி கோரப்படவேண்டிய கடப்பாடுடைய நபரிடம் கோரிக்கைசெய்யும் நபரால் எழுத்து வடிவில் கொடுக்கப்பட்ட அறிவிப்பில் இது குறித்துச் சொல்லப் பட்ட தேதியில் இருந்து நடவடிக்கைகள் தொடரப்பட்ட தேதி வரை :

வரம்புரையாக :— உறுகடனுக்கான அல்லது இழப்பீட்டிற்கான தொகை யானது, நடவடிக்கைகள் தொடரப்படுவதற்கு முன்னரே திருப்பிச் செலுத்தப் பட்டுள்ளவிடத்து, அத்தகைய திருப்பிச் செலுத்துகைக்குப் பிந்திய கால அளவுக்கு இந்தப் பிரிவின்படி வட்டி அனுமதிக்கப்படுதல் ஆகாது.

(2) உட்பிரிவு (1)இல் சொல்லப்பட்டுள்ளவாறான, நடவடிக்கைகள் எவற்றிலும்,—

(அ) இழப்பீடுகள்மீதான வட்டியைத் தவிர, நான்காயிரம் ரூபாய்க்கு மேற்படுகிற ஒரு தொகைக்கான தீர்ப்புரை, ஆணை அல்லது தீர்வம் வழங்கப்பட்டிருக்கிறவிடத்து, மற்றும்

(ஆ) அந்தத் தொகை வாதியின் அல்லது எவரேனும் பிற நபரின் உடலூறுகள் தொடர்பான அல்லது நபர் எவரின் இறப்பு தொடர்பான இழப்பீட்டினைக் குறித்துக் காட்டுவதாகவோ உள்ளடக்குவதாகவோ இருக்கிறவிடத்து,

அப்போது இந்த உட்பிரிவினால் அளிக்கப்பட்டுள்ள அதிகாரமானது, அந்த இழப்பீட்டின்மீதான அல்லது அறிவிப்பில் சொல்லப்பட்ட தேதியில் இருந்து நடவடிக்கைகள் தொடரப்பட்ட தேதிவரையிலான மொத்தக் காலஅளவிற்கோ அதன் பகுதிக்கோ நீதிமன்றம் உரியதெனக் கருதுகிற அதன் பகுதியின்மீதான வட்டித்தொகையில் சேர்த்துக்கொள்வதற்காக நீதிமன்றம் அந்த இழப்பீடு பொறுத்து வட்டி எதுவும் ஏன் வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தனியுறு காரணங்கள் இருக்கின்றன என்று தெளிவுறக் கண்டாலன்றி, செலுத்தப்படுதல் வேண்டும்.

(3) இந்தப் பிரிவிலுள்ள எதுவும்,—

(அ) (i) ஏதேனும் உடன்பாட்டின் பயன்திறனால் எந்த உறுகடன் அல்லது இழப்பீட்டின்மீது வட்டி உரிமையாகச் செலுத்தப்படத் தக்கதாக இருக்கிறதோ அந்த உறுகடன் அல்லது இழப்பீடு எது தொடர்பாகவும், அல்லது

(ii) தெரிநிலையானதொரு உடன்பாட்டின் பயன்திறனால் எந்த உறுகடன் அல்லது இழப்பீட்டின்மீது வட்டி செலுத்துவது தடை செய்யப்பட்டிருக்கிறதோ அந்த உறுகடன் அல்லது இழப்பீடு தொடர்பாக

பொருந்துறுதல் ஆகாது ;

(ஆ) (i) மாற்றுமுறையாவணங்கள் சட்டம், 1881இல் பொருள் வரையறை செய்யப்பட்டுள்ளவாறு மாற்றுச்சீட்டு, கடனுறுதிச் சீட்டு அல்லது காசோலைக்குப் பணம் வழங்க மறுக்கப்பட்ட தற்காக வசூலிக்கப்படத்தக்க சரியீட்டினை, அல்லது

(ii) உரிமையியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டம், 1908இன் முதலாம் இணைப்புப்பட்டியலின் ஆணை IIஇன் விதி 2இன் வகையங்களை

பாதித்தல் ஆகாது.

(இ) வட்டிக்கு வட்டி அளிப்பதற்காக நீதிமன்றத்திற்கு அதிகார மளித்தல் ஆகாது.

4. (1) பிரிவு 3இல் அடங்கியுள்ள எது எவ்வாறு இருப்பினும், செய்சட்டம் அல்லது பிற சட்ட விதி அல்லது சட்ட ஆற்றலையுடைய வழக்காறு எதன் பயன்திறனாலும் செலுத்தப்படத்தக்கதான அனைத்து நேர்வுகளிலும், வட்டி செலுத்தப்படுதல் வேண்டும். குறித்தசில செய்சட்டங்களின் படி செலுத்தப் படத்தக்க வட்டி.

(2) மேலே கண்டவாறு இருந்தபோதிலும், உட்பிரிவு (1)இன் வகையங்களின் பொதுப்பாங்கிற்குக் குந்தகமில்லாமலும், நீதிமன்றம், வட்டி ஏன் அனுமதிக்கப்படுதல் கூடாது என்பதற்குத் தனியுறு காரணங்கள் இருக்கின்றன என்று நீதிமன்றம் தெளிவுறக் கண்டாலன்றி, பின்வரும் நேர்வுகள் ஒவ்வொன்றிலும், கீழே குறித்துரைக்கப்பட்ட தேதியில் இருந்து நடவடிக்கைகள் தொடரப்பட்ட தேதிவரை நீதிமன்றம் தகுமானதெனக் கருதலாகும் வீதத்தில் வட்டியை அனுமதித்தல் வேண்டும், அதாவது :—

(அ) சட்டம் அல்லது ஒப்பந்தத்தின் வாயிலாகச் சுமத்தப்பட்டுள்ள கடமைப்பாட்டை நிறைவேற்றுவதற்கான பிணையமாக பணமோ பிற சொத்தோ வைப்பீடு செய்யப்பட்டிருக்குமிடத்து அந்த வைப்பீட்டின் தேதியிலிருந்து ;

(ஆ) பணத்தைச் செலுத்துவதற்கான அல்லது சொத்து எதனையும் மீண்டும் ஒப்படைப்பதற்கான கடமைப்பாடானது நம்பக உறவின் பயன்திறனால் எழுகிறவிடத்து, வழக்குமூலம் எழுந்த தேதியிலிருந்து ;

(இ) பணம் அல்லது பிற சொத்து மோசடியின் வாயிலாக பெறப்பட்டிருக்குமிடத்து அல்லது தொடர்ந்து வைத்துக் கொள்ளுமிடத்து, வழக்கு மூலம் எழுந்த தேதியிலிருந்து ;

(ஈ) கோரிக்கையானது, மணக்கொடை அல்லது வாழ்க்கைப் பொருளுதவிக்காக செய்யப்பட்டிருக்குமிடத்து, வழக்குமூலம் எழுந்த தேதியிலிருந்து.

5. இந்தச் சட்டத்திலுள்ள எதுவும், உரிமையியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டம், 1908இன் பிரிவு 34ஐப் பாதித்தல் ஆகாது. உரிமையியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டம், 1908இன் பிரிவு 34 பொருந்துதல்.

6. (1) இந்தச் சட்டத்தின் தொடக்கநிலையிலிருந்து, வட்டிச் சட்டம், 1839 மற்றும் அத்தகைய தொடக்கநிலைக்கு ஒட்டிமுன்பு, மாநிலம் எதிலும் செல்லாற்றலிலிருந்த அதற்கு நேரிணையான பிற சட்டம் எதுவும், நீக்கறவு செய்யப்பட்டதாகிவிடும். நீக்கறவும் காப்புரையும்.

(2) இந்தச் சட்டத்தின் தொடக்கநிலையின்போது முடிவுறா நிலையிலிருந்த உரிமை வழக்கு அல்லது பிற சட்ட நடவடிக்கை எதற்கும் இந்தச் சட்டத்தின் வகையங்கள் பொருந்துதல் ஆகாது ; மற்றும் அத்தகைய தொடக்க நிலையை ஒட்டி முன்பு பொருந்தத்தக்கதாக இருந்த நேரிணையான சட்டத்தின் வகையங்கள், உட்பிரிவு (1)ஆல் அத்தகைய சட்டம், நீக்கறவு செய்யப்பட்டிருந்த போதிலும், அத்தகைய உரிமை வழக்கிற்கு அல்லது பிற சட்ட நடவடிக்கைக்குத் தொடர்ந்து பொருந்துதல் வேண்டும்.

(3) குறிப்பிட்ட பொருட்பாடுகள் உட்பிரிவு (2)இல் சொல்லப்பட்டிருப்பதானது, நீக்கறவின் செல்திறம் குறித்து பொதுவகையங்கள் விளக்கச் சட்டம், 1897இன் பிரிவு 6இன் பொதுவான பொருந்துகைக்குக் குந்தகம் செய்வதாக அல்லது அதனைப் பாதிப்பதாக எண்ணிக்கொள்ளப்படுதல் ஆகாது.